மாநில வீட்டு வசதி போர்டு

*396 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ம் ஆண்டில் கண்டிராக்டர்களுக்கு சிமெண்ட் வழங்கிய வகையில் மாநில வீட்டுவசதி போர்டுக்கு நஷ்டம் ஏதேனும் வந்ததா?

(இ) ஆமெனில், நஷ்ட தொகை எவ்வளவு? அதற்குக் காரணங்கள் யாவை?

(உ) எந்தெந்த கண்டிராக்டர்களுக்கு எவ்வளவு சிமெண்ட் வழங்கப்பட்டது, அவர்களிடமிருந்து பெற்ற தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) விவர அறிக்கையொன்று * சபைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த வீட்டு வசதி போர்டுக்கு சிமிண்ட் வாங்கியதில் எந்த விதமான நஷ்டமும் ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். ஹவுஸிங் போர்டு சம்பந்தமாக கண்ட்ராக்டர்கள் 350 பேர்களுக்கு மேல் இருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 350 பேர்களுக்கு மேல் கண்ட்ராக்டர்கள் இருந்தும் கூட கால தாமதம் ஏற்படுவதினாலே இதை சர்க்காரே எடுத்துக்கொண்டு எஞ்சினியர் கள் மூலம் சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்பொழுது கால தாமதம் இன்னும் அதிகம் ஆகும். சர்க்காரே தன்னுடைய இலாகாவை வைத்து தானே செய்தால் இன்னும் காலதாமதம் அதிகமாகத்தான் ஆகும்.

குறைந்த வருமானமுள்ளவர்களுக்குக் காலனி

*397 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-ம் வருஷம் மதுரை நகரசபை குறைந்த வருமானம் (Lower income) உள்ளவர்களுக்கு காலனி கட்டியதா?

(இ) ஆம் எனில், எத்தனை வீடுகள்?

(உ) அதற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

---

* 4-11-1966-ம் தேதி மேசை மீது வைக்கப்பட்டது. இணைப்பாக அச்சிடப்படவில்லை.